Date : 29.04.2025

SC.No. : 40/2016

PW : 4

Name : **பொன்னுமுத்து க.பெ.ராமர்**

சாட்சி மீண்டும் மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

இந்த வழக்கின் புகார்தாரர் என்னுடைய அண்ணன் என்றால் சரிதான். ஏற்கனவே கிருஷ்ணனுக்கும் எனது அண்ணனுக்கும் எலக்சன் சம்மந்தமாக பிரச்சினை இருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று யார் யார் எங்கு நின்றிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஊருக்குள் சத்தம் கேட்டது நான் போனேன். மாரி அடித்த போது நான் மயக்கம் போட்டு கீழே விழுந்துவிட்டேன். மயக்கமடைந்த நிலையில் என்னை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர் நான் மறு நாள் மயக்கம் தெளிந்துவிட்டேன். போலிசார் மதுரை அரசு மருத்துவமனையில் மறுநாள் வைத்து என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். யார் யார் என்னென்ன ஆயூதங்கள் வைத்திருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சம்பவயிடத்திற்கு போகவில்லை என்றும் புகார்தாரர் எனது அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கை வழுப்படுத்த பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.04.29 10:35:57 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.